**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No 544/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W – 1 |
| Name | : | ஜெயம் வயது 38 |
| Father Name/Husband Name | : | நாராயணசாமி |
| Village | : | வேலப்பநாடாரூர் |
| Taluk | : | சங்கரன்கோவில் |
| Calling | : | நுங்கு வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of May 2025.

(எதிரி ஆஜர்)

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் வேலப்பநாடாரூரில் வசித்து நுங்கு வியாபாரம் செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன நாராயணசாமி எனது தந்தை. அவரும் நுங்கு வியாபாரம் செய்து வருகிறார். 24.04.2024 ஆம் தேதி அதிகாலை 4 மணியளவில் அவரது இருச்சக்கர வாகனத்தில் நுங்கு வியாபாரம் செய்வதற்காக எட்டையாபுரத்திற்கு கிளம்பி சென்றார். மதியம் 02.00 மணியளவில் நுங்கு வியாபாரம் செய்யும் குமார் என்பவர் வியாபாரம் முடித்து விட்டு வீட்டிற்கு வரும் வழியில் சிதம்பராபுரம் அருகிலுள்ள கல்லுரிக்கு பக்கம் எதிரே வந்த கேரளாவைச் சேர்ந்த டேங்கர் ஒன்று என் அப்பாவின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும் அதில் அவருக்கு காயம் ஏற்பட்டதாகவும் அவரை கோவில்பட்டி அரசு மருத்துவனையில் சேர்த்திருப்பதாகவும் தகவல் சொன்னார்கள். அவரை மருத்துவனையில் பார்த்த போது அவருக்கு உயிர் இல்லை.

2. பின்னர் காவல் நிலையம் சென்று இது சம்பந்தமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் என்னை விசாரித்தார்கள்

<u>**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

3. எனக்கு எழுத படிக்கத் தெரியும். புகார் மனுவை மாலை 04.00 மணிக்கு காவல் நிலையத்தில் வைத்து எழுதினேன். அப்போது என்னுடன் சேர்மன்

என்பவர் வந்தார். வேறு யாரும் வரவில்லை. அப்போது போலிசார் காவல் நிலையத்தில் வைத்து சேர்மனிடம் கையொப்பம் வாங்கினார்கள். புகார் கொடுத்த பின்பு நானும் சேர்மனும் உடனே எனது வீட்டிற்கு சென்றுவிட்டு பின்பு அடுத்த நாள் தான் ஆளை எடுப்பதற்கு வந்தோம். எனது தந்தை பொதுவாக எனது வீட்டிலிருந்து அதிகாலை 03.00 மணிக்கு வியாபாரத்திற்கு எட்டையாபுரத்திற்கு சென்றுவிட்டு மதியம் வீட்டிற்கு வருவார். எனது தந்தைக்கு வாகன உரிமம் கிடையாது. எனது தந்தைதான் தூக்க கலைக்கத்தில் அஜாக்ரரையாக எதிர் திசையில் வாகனத்தை இயக்கி விபத்து ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

4. நான் இழப்பீடு பெறுவதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் கிடையாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken before me in open court in thepresence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.